செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு-80 பரல் 3 ஐப்பசி

நவம்பர் 2005

தி. வ. ஆண்டு 2036

''செந்தமிழ்ச் செல்வி''

(செந்தமிழ்த் திங்கள் இதழ்)

நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை

இதழாசிரியர் குழு :

முனைவர் பொன் கோதண்டராமன்

முனைவர் தமிழண்ணல்

முனைவர் க ப. அறவாணன்

முனைவர் கு. சுந்தரமூர்த்தி

கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்

முனைவர் கவிமாமணி வேலூர் ம. நாராயணன்

டாக்டர் புரட்சிதாசன்

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசுவாமி

உள்ளுறை

கற்கோயிலும் சொற்கோயிலும்	81	00
பாவாணரும் பாராட்டும்	86	00
அதியமான்களும் கோசரும்	90	00
பழமொழி	95	00
சங்ககாலத்தில் யானைகள்	99	00
பஞ்சாபில் கரிகாற் சோழன் கதை	106	00
பாவைமார் ஆரிக்கும் பாடல்	109	00
இலக்கணச் சொற்களஞ்சியம்	118	00
மதிப்புரை	120	00

செந்தமிழ்ச் செல்வி

(இலக்கியத் திங்கள் இதழ்)

புதிய பொலிவுடன் வெளிவருகிறது

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 60.00

வெளிநாடு ரூ. 600.00

வாழ்நாள் கையொப்பம்

உள்நாடு ரூ. 600.00

வெளிநாடு ரூ. 2500.00

செந்தமிழ்ச் செல்வி
திருவள்ளுவர் ஆண்டு 2036.
ஐப்பசி - நவம்பர் 2005
சிலம்பு - 80, பரல் - 3

கற்கோயிலும் சொற்கோயிலும்

தமிழகத்திலுள்ள திருமடங்கள் பாடல்பெற்ற தலங்கள் சிலவற்றைத் தங்கள் ஆளுகைக்குள் வைத்துச் சிறப்பாகப் பராமரித்து வருகின்றனர். இதுபோலவே சொற்கோயில்களான நூல்களையும் அழகுற வெளியிட்டுச் சைவ அன்பர்களுக்கு அருந்தொண்டு ஆற்றி வருகின்றன. தருமையாதீனம் பல்வேறு சமய நூல்களைக் கடந்த பல ஆண்டுகளில் வெளியிட்டு வந்துள்ளது. அண்மையில் வெளிவந்து கொண்டிருக்கும் திருமுறை வெளியீடுகள் ஆதீனத்திற்குப் பெருஞ்சிறப்பு சேர்ப்பதாகும். அவ்வாறே திருவாவடுதுறை ஆதீனம் ஒவ்வொரு தனிக் கடவுளுக்கும் படங்களுடன் கூடிய கணபதி, முருகன், ஆடல்வல்லான், தட்சிணாமூர்த்தி போன்ற பல நூல்களை வெளியிட்டுப் பெருமை சேர்த்துக் கொண்டுள்ளது. திருப்பனந்தாளில் அமைந்துள்ள காசிமடம் பெயருக்கேற்பக் காசியில் கங்கைக் கரையில் சிவன் கோயிலை அமைத்துப் பராமரித்து வருவதுடன் அடியார்கள் தங்குவதற்கு ஓர் அருமையான சத்திரத்தையும் நடத்திவருகிறது. வெளியீடுகளைப் பொறுத்தவரை கடந்த பல ஆண்டுகளாகத் திருமுறை நூல்களை மிக மலிவான விலையில் தொடர்ந்து வெளியிட்டுச் சைவப் பெருமக்களுக்குப் பெருந் தொண்டு ஆற்றிவருகிறது.

இந்த வரிசையில் 200 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பெற்ற தமிழ்நாட்டு, சிவகங்கை மாவட்டம்,

காரைக்குடி அருகிலுள்ள கோவிலூர் மடமும் இணைந்துள்ளது. இது அத்வைத வேதாந்த மடம், தஞ்சை மாவட்டத்தில் இதுபோன்ற வேதாந்த மடங்கள் நிரம்ப உள்ளன. இங்கு அத்வைத வேதாந்தம் தமிழில் கற்பிக்கப்பட்டு வருவது இவற்றின் தனிச்சிறப்பாகும். முன்பு வாழ்ந்த அறிஞர் பெருமக்களால் எழுதப்பெற்ற 14 வேதாந்த நூல்களின் அடிப்படையில் சிறப்பான முறையில் இது தொடக்கம் முதல் கற்பிக்கப்பட்டு வந்துள்ளது.

இம் மடத்தின் ஆதீன கர்த்தராகப் புதிதாகப் பொறுப்பேற்றவர் 12ஆவது பட்டமாகிய சீர்வளர்சீர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள். 1995இல் இவர் பொறுப்பேற்றவுடன் சில ஆண்டுகளாகச் சரியாகப் பராமரிக்கப் பெறாமலிருந்த மடம் சீர் செய்யப்பட்டுள்ளது. சுவாமிகள் திருமணமாகாமல் கலைப்பணியே தம் வாழ்நாட்பணி என்று சென்னை அடையாறில் உள்ள பிரம்ம வேதாந்த சங்கத்தில் தொண்டாற்றி வந்தார். ஆடற் கலையரசி ருக்மணி அருண்டேல் அம்மையாரிடம் உதவியாளராக இருந்தார்.

அதேசமயம் தமக்குள் இருந்த கலையார்வத்தைப் பலவழிகளில் வளர்த்துக் கொண்டார். முதலில் இவர் ஒரு சிறந்த புகைப்படக் கலைஞராகத் திகழ்ந்தார். ருக்மணி அம்மையாரின் நடனவகைகள் பலவற்றை அவ்வப்போது எடுத்துச் சேர்த்து இரண்டு பெரிய பட நூல்களாக வெளியிட்டுள்ளார். பரதக்கலை பற்றி இந்திய அஞ்சல்துறை படம் வெளியிட முற்பட்டபோது இவர் எடுத்த படமே அஞ்சல்தலையில் இடம்பெற்றது.

இதை ஒட்டி நம் நாட்டில் நுண்படப் பதிவு முறை (மைக்ரோ ஃபிலிம்) பரவாத நேரத்தில் இம்முறையைக் கையாண்டு பலவற்றைப் பதிவு செய்தார். குறிப்பாக 'இந்து' நாளிதழின் தொடக்ககால முதலான ஏடுகள் முதலியவற்றை 'இந்து' நிறுவனத்திற்காகப் பதிவு செய்து கொடுத்தார்.

படக்கலையுடன் அச்சுக்கலையிலும் இவர் நாட்டம் சென்றது. நூல்களை வெளியிடுவதற்கென்று கலாசேத்திரா அச்சகத்தைத் தொடங்கினார். தொடக்கநாள் முதல் இதுநாள் வரை சுவாமிகள் பொறுப்பிலேயே உள்ளது. இதன் வழி பல சிறப்பான நூல்களை அச்சிட்டார். மதுரையில் நடைபெற்ற 5ஆம் உலகத்தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளடங்கிய மூன்று பெரிய தொகுதிகளை மிக அழகாகவும் சிறப்பாகவும் அச்சிட்டுக் கொடுத்தார்.

மாணவர்களின் கல்வி முறைகளில் சுவாமிகள் தனிக் கவனம் செலுத்தினார். வேறு எங்கும் பரவலாகக் கற்றுக் கொடுக்காத மாண்டிசோரி கல்வி முறையைப் பரப்புவதற்காக அது தொடர்பான பாடநூல்களை உலக முழுவதுமுள்ள பள்ளிகளின் பயன்பாட்டிற்காக இவரே அச்சிட்டு வருகிறார். இத்துடன் தம் அச்சக மாடியில் சிறிய அளவில் மாண்டி சோரிக் கல்வி வழி ஒரு பள்ளியையும் நடத்தி வருகிறார்.

கோயிலூர் மடத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபின் இவர் தம் இயற்பெயரான திரு. நாச்சியப்பன் என்பது சீர்வளர்சீர் நாச்சியப்ப சுவாமிகளாக மாறியது. மடத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் பல புதிய கட்டிடங்களைக் கட்டத் தொடங்கினார். முதலில் கோயிலூர் மடத்தைப் புதுப்பித்தார். ரிசிகேசத்தில் ஓர் அருமையான தங்கும் விடுதியை மூன்று நட்சத்திர விடுதிபோல் அமைத்துள்ளார். கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய இடங்களில் விடுதி அமைக்க ஏற்பாடு செய்து வருகிறார். இவை அனைத்துக்கும் தலையான வகையில் அமெரிக்காவில் நியூயார்க் அருகில் ரூ. 50 கோடியில் கோயிலூர் மடத்தின் கிளையையும் மிகப் பிரம்மாண்டமான சிவன் கோயிலையும் அமைத்து வருகிறார். திருவண்ணாமலை, சிதம்பரம் போன்ற 10 இடங்களிலும் கோவிலூர் மடத்தின் கிளைமடங்கள் உள்ளன. சென்னையில் மடத்திற்கென்று தனி இடம் வேண்டுமென்று மேற்கு மாம்பலத்தில் காஞ்சி சங்கராச்சாரியார் மடத்திற்குப் பின்னால் ஒரு மூன்றடுக்கு மாளிகையைச் சுவாமிகள் எழுப்பியுள்ளார். எதிலும் இவர்தம் கலையுணர்வைக் காணலாம்.

மடங்களைப் பாதுகாப்பதுடன் தமிழையும் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் சுவாமிகளுக்கு உண்டாகியது. தமிழ் மறையாம் திருக்குறளுக்குச் சென்னையில் மூன்று நாள் மாநாட்டை நடத்தினார்.

தமிழில் உள்ள பல செவ்வியல் இலக்கியங்கள் சாதாரண மக்களைச் சென்றடையவில்லை என்ற ஏக்கம் இவருக்கு ஏற்பட்டது. முதலில் திருமூலரின் திருமந்திரத்தை ஒரு செம்பதிப்பாகக் கொண்டுவந்தார். புத்தகம் அச்சடிப்பது என்றால் விலையுயர்ந்த, தரமான தாளைப் பயன்படுத்த வேண்டுமென்பது சுவாமிகள் முடிவு. தமிழறிஞர் டாக்டர் சுப. அண்ணாமலை அவர்களைக் கொண்டு குறிப்புரையுடன் மூன்று தொகுதிகளாகத் திருமந்திரத்தை வெளியிட்டார்.

அடுத்து தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்க்கும் சங்க இலக்கிய நூல்களை இன்றுள்ள வாசகப் பெருமக்களுக்குப் புரியக்கூடிய முறையில் எளிய நடையில் அமைந்த உரையுடன் வெளியிடத் திட்டமிட்டார். டாக்டர் தமிழண்ணல், டாக்டர் சுப. அண்ணாமலை இருவரையும் பொதுப் பதிப்பாசிரியர்களாக அமர்த்தினார். ஒன்பது பேரறிஞர்களைக் கொண்டு எட்டுத் தொகை-பத்துப்பாட்டு நூல்களை உருவாக்கினார்.

பாட்டும் தொகையுமான நூல்களுக்கு உரை எழுதியோர் வருமாறு: நற்றிணை - கதிர். மகாதேவன்; குறுந்தொகை - தமிழண்ணல்; ஐங்குறுநூறு - அர. சிங்கார வடிவேலன்; பதிற்றுப்பத்து - அ.மா. பரிமணம்; பரிபாடல் - இரா. சாரங்கபாணி; கலித்தொகை - சுப. அண்ணாமலை; அகநானூறு - (களிற்றியானை நிறை) - மீனவன் தெ. முருகசாமி; (மணிமிடை பவளம்) சுப. அண்ணாமலை; (நித்திலக் கோவை) - தமிழண்ணல், புறநானூறு - இரா. இளங்குமரன்; பத்துப்பாட்டு - ச.வே. சுப்பிரமணியன்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழும் சிறந்த உரையாசிரியர்களாக இவர்களைக் கொள்ளலாம். மக்கள்

பதிப்பு என்ற பெயரில் கல்லூரிக் குறிப்பேடுகள் போல உரை நூல்கள் வெளிவரத் தொடங்கியுள்ள நிலையில் இவ் அறிஞர்கள் இந்நூல்களுக்கு உரையெழுத முற்பட்டமை பாராட்டுதற்குரியதாகும்.

உரை வேந்தர்களான ந.மு. வேங்கடசாமி நாட்டார்; கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை; ஔவை சு. துரைசாமிப் பிள்ளை; பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார் வரிசையில் இவர்களும் தமிழ் மக்கள் உள்ளங்களில் இடம்பெறுவர்.

இந்த அரிய உரைநூல்களை தமிழாய்ந்த அறிவியல் அறிஞர், இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர். அப்துல் கலாம் அவர்கள் வெளியிட வேண்டுமென்று சுவாமிகள் விரும்பினார். குடியரசுத் தலைவர் தம் மாளிகையிலேயே 29.9.2005இல் வெளியீட்டு விழாவை நடத்த இசைந்தார். சுவாமிகள் உரையாசிரியர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு தலைநகர் சென்று வெளியீட்டு விழாவை நடத்தினார். இவ்விழா தமிழன்னைக்கு எடுத்த சிறப்பான விழாவாக அமைந்தது. பின்னர் மதுரையில் இந் நூல்களின் அறிமுக விழாவை நடத்தினார்.

கோவிலூர் மடத்தின் சார்பில் நாதசுவரம், தவில், வேதாந்த நூல், திருமுறை, சிற்பக்கலை, ஐம்பொன் சிலை வடித்தல் போன்ற படிப்புகளை காரைக்குடி மடத்தில் சுவாமிகள் நடத்திவருகிறார். ஏறத்தாழ 500 மாணவர்கள் இலவசமாக இக்கல்விகளைப் பெற்று வருகின்றனர்.

கோயில் கலை, பண்பாடு, தமிழ் இலக்கிய, சமய, இலக்கணக் கல்வி போன்றவற்றை வளர்க்க ரூ. 15 கோடி செலவில் 'நிகர் நிலைப் பல்கலைக் கழகம்' ஒன்றை நிறுவும் பெரும் பணியில் சீர்வளர்சீர் நாச்சியப்ப சுவாமிகள் ஈடுபட்டுள்ளார்கள். இவர்கள் முயற்சிகள் அனைத்தும் வெற்றிபெற அண்ணாமலையான் அருள்புரிவாராக.

பாவாணரும் பாராட்டும்

தமிழாகரர் தெ.முருகசாமி, புதுச்சேரி 9

தெய்வத் தமிழ்மொழியைத் தேனார்ந்த தாய்மொழியை
வையம் மகிழ வளர்மொழியை - ஐயமறக்
கற்றாரே கற்றார்மெய் கண்டார் பெருஞ் செல்வம்
பெற்றாரே பெற்றார்நற் பேறு

என்பது மொழி ஞாயிறு பாவாணரின் உள்ளக் கிடக்கையான பாடல். அளப்பரிய பல விருப்பங்களைக் கொண்ட பாவாணர்தம் படைப்புக்கள் தேவநேயமாக மலர்ந்துள்ளன. இந்நிலையில் தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை என்ற பாவேந்தர் கருத்துக்கிணைய பாவாணருக்கு அஞ்சல் தலை வெளியிடுவதைப் பாவாணர் பற்றாளரும் பிறரும் எதிர்பார்க்கும் எதிரொலியாக இக்கட்டுரையமைகிறது.

மாந்த இனத்தின் மூலமொழி எது எனத் துல்லியமாக ஆய்ந்துரைத்த ஞானிதான் பாவாணர். அவர் திண்ணிய ஆங்கில அறிவாலும் அந்நிய வடமொழிப் பயிற்சியாலும் மன்னிய திராவிட மொழிக் கற்பாலும் மொழிக் கடலில் தமிழ் என்னும் உறவுக்கோல் நட்டுக்காய்தல் உவத்தல் இல்லாத உணர்வுக் கயிற்றினால் முறுக வாங்கிக் கடைந்த முதற்றாய் மொழியாளர்.

மறந்தும் புறந்தொழா சமயவாதிகளைப் போலப் பிறமொழி கலவா எழுத்தும் பேச்சும் கொண்டவர். செந்தமிழ் நாட்டுக் கால்டுவெல். அகர முதலி ஆசான். வடமொழி தேவமொழி என நம்பப்பட்டதை மறுத்ததோடு திருத்தியும் மாற்றியும் சிலரால் எழுதப்பட்ட தமிழ் வரலாற்றைப் புதுக்கிப் பொலிவுபெறச் செய்த புண்ணியர்.

எது தமிழ், எது வடசொல் என வேறுபாடறியாத மௌனப் பூட்டுக்கு மொழித்திறவுகோல் தந்த தீரர். இதனால் தம் கருத்தை வழிவழித் தாங்கி வளர்க்கும் இரா.இளங் குமரனார் போன்ற மொழிப்பட்டாளத்தைத் தோற்றுவித்த உத்தமர் நேச்சாசி.

மொழி ஆராய்ச்சியாகப் பல நூல் தந்த மொழித் தந்தை வேர்ச்சொல், அடிச்சொல் எனச் சல்லி சல்லியாய்ப் பிரித்தறிந்து உணர்த்திய மொழிப்பித்தர். சாதிசமயங்கட்கு இடங்கொடா மொழி மருத்துவர். அரசியல் கட்சி வண்ணங்களில் கரைந்திடாத வானவில். மொழியால் எதிர்த்தோரைத் தமிழ் விழியால் சுட்டெரித்த நக்கீரர். உலகமொழியியல் வானில் ஒளிரும் ஒரு துருவ மீன்.

இத்தகு மொழி வித்தகரின் எண்ணங்கள் மிகவும் உயர்ந்தவை. அவர் தமக்கு முன்பும் தம் காலத்தும் மொழிக்குப் பாடுபட்டோரை நீள நினைந்து பாராட்டிய உரைகள் இறவாப் புகழுடையவை. அய்யன் திருவள்ளுவரைப் பற்றிய மதிப்பீடு:

'திருவள்ளுவர் ஆரியப் பல் சிறு தெய்வ வழிபாட்டை நீக்கிக் கடவுள் வழிபாட்டை நிறுவியும் அருள் நிறைந்த துறவியரே அந்தணர் என்று வரையறுத்தும் குலத்திற்கேற்பத் தண்டனை கூறும் ஆரிய முறையை அகற்றி நடுநிலை நயன்மை நாட்டியும் தமிழ்ப் பண்பாட்டைக் கிளர்வித்தார்.

சிவஞான முனிவரைப் பற்றிக் கூறும்போது, 'வடமொழி உயர்வென்றும் தமிழ் தாழ்வென்றும் கருதப்பட்ட இடத்தில் இருந்து கொண்டு தமிழ் வடமொழிக்கு எள்ளளவும் இளைத்ததன்று என நிறுவியவர்' என்று பாராட்டினார். அவ்வாறே தமிழ்த்தாத்தா உ.வே.சா.பற்றிக் கூறுகையில் 'ஏட்டுச் சுவடிகளைத் திரிந்து தேடி விறகுத் தலையன் போல் தலையிற் சுமந்து கொணர்ந்தவர்' எனப் பாராட்டினார்.

மறைமலையடிகளிடம் பாவாணர்க்கிருந்த மதிப்பு, மேட்டு நிலத்திலிருந்து பள்ளத்தில் பாயும் மடை திறந்த வெள்ளம் போன்றது. 'மறுமலர்ச்சித் தனித் தமிழ் ஊழியைத் தொடங்கி வைத்தவர்' என்றதுக்கு மேல் பாராட்டுண்டோ? 'மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தல்' எனத் தொல்காப்பியர் தொட்டுத் துலக்கிய மொழிப் பெருமை மறைமலையார்க்கே உண்டென்ற புகழ் மகுடத்தைச் சூட்டி மகிழ்ந்த சிறப்பு பாவாணர் ஒருவரையே சாரும்.

மடாலயத் துறவியருள் அருள் நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளிடம் கொண்ட ஈடுபாடு அளப்பரியது 'இந்தியை எதிர்த்துத் தமிழைப் பாதுகாத்ததோடு தமிழரின் இருமை நலத்திற்கும் தொண்டாற்றிடும் தூயர்' என்ற மதிப்பீடு வானளாவிய பொதிகை உயர்ச்சியினும் பெரிது எனலாம்.

இவ்வாறாகத் தக்காரைப் பாராட்டும் வழியாகத் தமிழை எந்நாளும் புரந்த பாவாணர்தம் விருப்பங்கள் பலப்பலவாய் இருந்தன. அவ்விருப்பங்களுள் சில அவர்தம் காலத்திலேயே ஈடேறின. 'நம் நாட்டுக்குத் தமிழ்நாடு என்ற பெயர் அமைய வேண்டும். இந்தியால் தமிழ் கெடுவது திண்ணம் ஆதலால் தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழித் திட்டம் கையாளல் வேண்டும். பல்கலைக் கழகங்களுக்குத் தமிழறிஞர்கள் துணை வேந்தராக வேண்டும்' என்று தமிழ் வரலாற்று நூலில் அவர் வெளிப்படுத்திய வரைவுகள் நிறைவேறின. ஆனாலும், தமிழ் வளர்ச்சிக்குச் சோதனையான காலம் இது என்ற அவர்தம் கவலை தொடர்வதுதான் சிந்திக்கத் தக்கதாய் உள்ளது. இத்துயர் நீங்கப் பாடுபடுவது ஒவ்வொரு தமிழரின் கடனாகும்.

இந்நிலையில் பாவாணர்தம் நூல்களை நாட்டுடைமை ஆக்கித் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்ட தமிழக அரசு மற்றும் ஒரு சிறப்பாகப் பாவாணருக்கு மணி மண்டபம் அமைக்கப் போவதன் மூலம் பெருமையைச் சேர்த்துக்

கொண்டது. இதன் தொடர்ச்சியாக நடுவண் அரசும் தன் பங்களிப்பாகப் பாவாணருக்கு அஞ்சல் தலை வெளியிட்டால் சிறப்பாக இருக்கும் என்பது தமிழர்தம் பெரு விருப்பாகும்.

வரலாற்று நாயகர்களை மறவாமல் அவர்களுக்கு அஞ்சல் தலை வெளியிட்டும் போற்றியும் வரும் மைய அரசு செயல்பாட்டின் தொடர்ச்சியில் தற்போது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வெயியிட்ட திரு.வி.க., தேசிக விநாயகம் பிள்ளை, அயோத்திதாசர் போன்றோரின் வரிசையில் இன்னும் பலர் உள்ளனர். குறிப்பாகப் பாவாணர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் போன்றோர்க்கும் அஞ்சல் தலை வெளியிட்டுப் பாராட்ட வேண்டும் என்பதே தமிழர்தம் எதிர்பார்ப்பாகும்.

இவை அனைத்துக்கும் மேலாக இருபதாம் நூற்றாண்டின் தமிழ்மொழி இயக்கங்களின் தலைசிறந்த இயக்கமான தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கிவைத்த மறைத்திரு மறைமலையடிகளாருக்கு அஞ்சல் தலை இதுவரை வெளியிடாதது மிகப்பெரிய குறையாகும். அடிகளார் இப்பேரியக்கத்தைத் தொடங்கியிராவிட்டால் பாவாணர் ஏது? பெருஞ்சித்திரனார் ஏது? திராவிட இயக்கம் ஏது? இத்தகைய பெருந்தகையாரின் நூற்றாண்டு விழாவை இந்திய அரசின் நெருக்கடி நிலையைக் காரணம் காட்டி அரசு விழாவே எடுக்கவில்லை. தனிப்பட்ட அமைப்புகள் ஆங்காங்கே சிறுசிறுவிழாக்களை நடத்தின. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மட்டுமே இருநாள் விழாவாகச் சென்னையில் மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில் பெரிய விழாவை நடத்தியது. நூற்றாண்டு விழா மலரையும் வெளியிட்டது. நூற்றாண்டு விழா நடத்தாத குறையை அஞ்சல் தலை வெளியிட்டு நிறைவு செய்வதாக.

அதியமான்களும் கோசரும்

சு.இரத்தினசாமி

வடமொழியாளர் தமிழ்ப் பெயர்களை மொழி பெயர்ப்பதற்கேற்பப் பலவாறு திரித்து எழுதுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

மயிலாடுதுறையை மாயூரம் என்றும், குரங்காடுதுறையைக் கபிஸ்தலமென்றும், முதுகுன்றத்தை விருத்தாசலமென்றும், திருமறைக்காட்டினை வேதாரண்யம் என்றும், எருமை நாட்டை மகிஷுர் என்றும், சிங்கவேள் குன்றத்தை அகோபிலம் என்றும், தான் தோன்றியப்பரை சுயம்புநாதர் என்றும், பழமலைகாடரை சுவேதாரண்யர் என்றும், அண்ணாமலையாரை அருணாசலேஸ்வரர் என்றும், எழில் மலையை எலிமலை என்றும் தவறாகக் கருதி மூஷிகநாடு என்றும் மொழி பெயர்த்தனர்.

அவ்வாறே வாய்மொழிக்கோசர் என்பதனைச் சத்திய புத்திரர் என்று மொழி பெயர்த்துள்ளனர். இவ்வாய் மொழிக்கோசர் பண்டைத் துளு நாட்டின் தென்பகுதியில் வசித்தனர். பண்டு அப்பகுதி நன்னர் என்ற சிற்றரசரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அப்பகுதி இப்பொழுது கேரள நாட்டின் வடபகுதியாக உள்ளது. கோசர் கோடு என்னும் மாவட்டமும் கேரள மாநிலத்தின் வடபகுதியாக உள்ளது.

கி.பி. 250 வரை கேரள மாநிலம் முழுவதும், தென் கன்னட மாவட்டம் முழுவதும் தமிழ்நாடாக இருந்தது ஈண்டு நினைவு கூரத்தக்கது. ''பொன்படு கொண்கான நன்னன்'' என்று நற்றிணை 391-ம், ''தண்பல இழிதரும் கொண்

பெருங்கானம்'' என்று புறம் 154-ம், ''பிழைதக ஓங்கிய கழைதுஞ்சு மருங்கில் கானமர் நன்னன்'' என்று அகம் 192-ம், ''இருப்பிடம் படுத்த வடுவுடை முகத்தர் கருங்கட்கோசர் நியமம்'' என்று அகம் 90-ம், ''பல்லிருங் கோசர் கண்ணி அயரும் மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்'' என்று அகம் 216-ம் கூறுகின்றன.

கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த மூன்று நன்னர்களைப் பற்றிய செய்திகள் சங்க நூல்களிலிருந்து தெரிய வருகின்றன.

பேரறிஞர் மயிலை சீனிவேங்கடசாமி கீழ்க் கண்டவாறு கூறுகிறார். (துளுநாட்டு வரலாறு). ''தேவனாம் பிரியன் என்னும் சிறப்புப் பெயரைக் கொண்டிருந்த அசோக சக்கரவர்த்தி பாரத நாட்டைக் கி.மு.275 முதல் 234 வரை ஆண்டபொழுது அவருடைய இராச்சியத்தில் தெற்கே இருந்த தமிழகம் அடங்கவில்லை என்பது அவருடைய சாசனங்களிலிருந்து தெரியவருகிறது. சாசனங்கள் சோழ, பாண்டிய, சத்திய புத்திர, கேரள புத்திர, தம்ப பன்னி (இலங்கை) ஆகிய நாடுகள் அசோகருடைய ஆட்சிக்கு உட்படவில்லை என்பதைக் கூறுகின்றன. (நாடுகளின் பெயர்கள் சோடா, பாடா, சதிய புதோ, கேத புதோ என்று குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது)

இருக்கு வேதமும், தைதிரிய்மும், வியாச பாரதமும் சேரர்களைச் சேரர் என்றே கூறும்போது, அசோகன் கல்வெட்டு சேரர்களைக் கேரளர் என்று பிழையாகக் கூறுகிறது.

சேரநாட்டுக்கு வடக்கில் இருந்த துளுநாட்டின் தென் எல்லை கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஏறத்தாழ கண்ணனூர் வரை பரவி இருந்தது. கண்ணனூருக்கு வடக்கே 16 கல் தொலைவில் உள்ள எழில் நெடுவரை நன்னனுடையது. எழிமலா என்ற ஒரு இரயில் நிலையம் இப்பொழுது உள்ளது. ''பாரதத்துத் தலைவன்

ஆரநன்னன் ஏழில் நெடுவரைப் பாழிச்சிலம்பு'' என அகம் 152 கூறுகிறது.

ஏழில் மலைக்கு மேற்கில் உள்ள தீவுகளில் கடற்கொள்ளையர் இருந்தனர் என்றும், நன்ன அரசர்கள் அக்கொள்ளையர்களுக்கு உதவினர் என்றும், அக் கொள்ளையர் சேர நாட்டுக்கு வரும் கப்பல்களை மடக்கிச் சூரையாடினர் என்றும், அதுவே இவ்விரு நாடுகளுக்கும் பகை உண்டாகக் காரணமாக இருந்ததென்றும் அறிஞர் வேங்கடசாமி கூறுகிறார்.

இந்நன்னர்களது நாட்டின் ஒரு பகுதியில் வாய்மொழிக்கோசர் என்னும் இனத்தவர் வசித்தனர் என்றும், அவர்களே அசோகன் கல்வெட்டில் 'சத்திய புத்திரர்' என்று குறிப்பிடப்பட்டவர் என்றும் திண்ணமாகக் கூறுகிறார். கோசர்கோடு என்று ஒரு மாவட்டம் இப்பொழுது உள்ளது நினைவு கூரத் தக்கது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த நன்னர்கள் மூவர் பற்றிய செய்திகளே சங்க நூல்களிலிருந்து தெரிய வருகின்றன. அவர்களுள் முதலாம் நன்னன் ஏறத்தாழ கி.பி. 100 முதல் 125 வரை ஆட்சி செய்தான். இந்நன்னன் கொடியவன் என்றே தெரிகிறது. இவன் தான் வென்ற அரசர்களது மனைவியரின் கூந்தலை மழித்து அவற்றினால் கயிறு திரித்தான் என்று பரணர் கூறுகிறார்.

"விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்தர் ஒட்டி'ய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சியிற் கொடிதே" (நற்றிணை 270)

கொடிது என்றே புலவர் கூறுகிறார்.

இம்மன்னனது தோப்பிலிருந்து மாங்கனி ஒன்று சிற்றாற்றில் அடித்துக் கொண்டு வந்தது. நீரில் மிதந்து வந்த அம்மாங்கனியை எடுத்துத் தின்ற குற்றத்திற்காக ஒரு பெண்மணிக்கு நன்னன் மரண தண்டனை விதித்தான்.

அப்பெண்ணின் தந்தை தொண்ணூற்று ஒன்பது யானைகளையும் அப்பெண்ணின் எடையளவு பொன்னும் கொடுக்க முன்வந்து ஏற்காது அப்பெண்ணைக் கொன்றுவிட்டான். அச்செய்தியைப் பரணர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

''மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல் தருபசுங்காய் தின்ற தன் தப்பற்கு
ஒன்பதிற் றொன்பது களிற் றொரு அவள்நிறை
பொன் செய்பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல.'' (குறுந்தொகை 292)

இக்கொடுஞ் செயலினால் கோசர் இவன்மீது வெறுப்புற்றனர். பழிக்குப் பழியாக சூழ்ச்சி செய்து அம்மாமரத்தை வெட்டி விட்டனர். அச்செய்தியையும் பரணர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

''நன்னன்
நறுமா கொன்று ஞாட்பிற் போக்கிய
ஒன்று மொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே'' (குறுந்தொகை 72)

ஒன்று மொழிக்கோசர் என்கிறார் புலவர்.

கோசர் போர்த் தொழில் புரியும் ஒரு வலிமை மிக்க இனத்தவர். 99 யானைகளும் பொன்னும் கொடுக்கும் அளவுக்கு வசதி படைத்தவர். பெருவாரியான மக்கள் தொகை உடையவர்.

இனி, தகடூரை (தருமபுரியை) ஆட்சி செய்த அதியமான்கள் கோசர்களா என்பதை ஆய்வோம். புறநானூற்றில் 24 பாடல்கள் அதியமான் நெடுமானஞ்சியைப் பற்றியும், 3 பாடல்கள் அவன் மகன் பொகுட்டெழினியைப் பற்றியும் உள்ளன. பெரும்பாலான பாடல்கள் ஔவையாரால் பாடப் பெற்றுள்ளன. ஒரு இடத்திலாவது அதியமான்கள் கோசர் என்றோ, சத்திய புத்திரர் என்றோ கூறப்படவில்லை. அதியமான் நெடுமானஞ்சி மழவர் பெருமகன் என்றும்,

மன்னர் பெருமகன் என்றும், அதியர் கோமான் என்றும் கூறப் பட்டுள்ளன. அவனது படைத்திறமும், கொடைத் திறமும் பலவாறு கூறப்பட்டுள்ளன. அவனது முன்னோர்கள் கரும்பைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்தது குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆனால் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஜம்பை என்னுமிடத்தில் ''சதிய புதோ அதியந் நெடுமாந் அஞ்சி ஈத்த பாளி'' என்று கூறும் கல்வெட்டொன்று தொல்லியல் துறையினரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அறிஞர் சேலம் பா.அன்பரசு அவரது ''அதியமான்கள் வரலாறு'' என்னும் நூலில், அதியமான்கள் சேரர் குடியினரோ அல்லது கோசர் குடியினரோ அல்லர் என்றும், கொங்கு நாட்டு மூத்த குடியினருள் ஒருவர் என்றும், மழகொங்கு இனத்தவர் என்றும் கூறுகிறார். மேலும் அவர் ஜம்பைக் கல்வெட்டில் ''அதிய புதோ'' என்பதற்குப் பதில் ''சதிய புதோ'' என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், புலவர் செ.இராசு அவர்களின் கூற்றையும் சுட்டிக் காட்டுகிறார்.

வடவர்கள் தமிழ்ப் பெயர்களைத் தவறாகவும் திரித்தும் கூறுவது புதிதல்ல. சேரர்களைக் கேரளர் என்றும், சோழர் களைச் சோடர் என்றும், பாண்டியர்களைப் படா என்றும், அசோகர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது தெரிந்ததே. அதிய புதோவைச் சதிய புதோ என்று கூறியதில் வியப்பொன்றுமில்லை.

அதனால் அதியமான்கள் கோசர் இனத்தவர் அல்லர் என்பது தெளிவு.

பழமொழி

(ஒரு வரையறையும் விளக்கமும்)

முனைவர் பொற்கோ.

பழமொழி என்பதற்கு நேரடியான பொருள் பழமையான மொழி என்பது. ஒவ்வொரு பழமொழியும் ஒரு மரபுவழிக் கருத்தை நமக்கு வழங்குகிறது. பழமொழி என்பதற்கு மரபு வழிக் கருத்து என்பது ஒரு பொருள் மறைந்து கிடக்கிறது என்று சொன்னால் அது தவறாகாது.

பழமொழிக்கு இன்னார்தான் ஆசிரியர் என்று நாம் சொல்ல முடியாது. பழமொழி மக்களின் சொத்து. வழிவழியாக மக்கள் பழமொழியைப் பயன்படுத்திப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள்.

'தன்கையே தனக்குதவி', 'மாடு இளைத்தால் கொம்பு இளைக்குமா?' இவை போன்ற தொடர்களைக் கேட்கும்போது இவை பழமொழி என்று தயக்கம் இல்லாமல் உடனே நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். ஆனால், 'மதில் மேல் பூனை', 'ஆடிய கூத்தும் பாடிய ராகமும்', 'ஆரம்ப சூரத்தனம்', 'உடும்புப்பிடி', 'முதலைக் கண்ணீர்' என்பன போன்ற தொடர்களைக் கேட்டவுடன் அவற்றைப் பழமொழி என்று ஏற்க மறுக்கிறோம். அல்லது தயங்குகிறோம். அப்படியானால் பழமொழிக்கு என்று தெளிவான அமைப்பு இருக்கிறது என்பது உறுதியாகிறது. அந்த அமைப்பை நாம் விளங்கிக் கொள்ள முயல வேண்டும்.

கருத்து நிறைவு; நாம் முதலிலேயே குறிப்பிட்டபடி ஒவ்வொரு பழமொழியும் கருத்து நிறைவு உடையதாக இருக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு பழமொழியும் ஒரு கருத்தினை வழங்க வேண்டும். சொல்லுக்குப் பொருள் உண்டு. தொடருக்கும் பொருள் உண்டு. பல சொற்கள் ஒன்று சேரும்போது தொடர் உருவாகிறது. தொடர் முற்றுத் தொடராக இருந்தால் அதற்கு ஒரு கருத்து இருக்கிறது. உடும்புப்பிடி, முதலைக் கண்ணீர், மதில்மேல் பூனை முதலான தொடர்களுக்குப் பொருள் இருக்கிறது. ஆனால் இந்தத் தொடர்களுக்கு நிறைவு பெற்ற கருத்து ஏதும் இல்லை. தன் கையே தனக்குதவி என்ற தொடரில் நிறைவு பெற்ற கருத்து இருக்கிறது. அது நமக்கு ஒரு கருத்தை வழங்குகிறது. இப்படி ஒவ்வொரு பழமொழியும் கருத்தால் நிறைவு பெற்று விளங்கக் காண்கிறோம். ஒவ்வொரு பழமொழியும் ஒரு கருத்தை வழங்குகிறது. அப்படி ஒரு கருத்தினை ஒரு தொடர் வழங்கவில்லை யானால் அது பழமொழி என்பதில் நமக்கு ஐயப்பாடு எழுகிறது.

அப்படிக் கருத்தினை வழங்கும்போது அந்தக் கருத்து வெறும் செய்தி விளம்பலாக இருக்கலாம். அல்லது வழிகாட்டுரையாகவும் இருக்கலாம். செய்தி விளம்பலாக அமைகின்ற பழமொழிகள் அனுபவ உண்மைகளாகவும், உலகியல் உண்மைகளாகவும் அமைவது உண்டு.

தன் கையே தனக்குதவி என்பது ஒரு அனுபவ உண்மை. இது செய்தி விளம்பலாக அமைந்த பழமொழி. வழிகாட்டுரையாக அமையும் பழமொழிகள். 'இதைச் செய்', 'இதைச் செய்யாதே' என்று அறிவுறுத்தும் போக்கில் அமைகின்றன. 'இதைச் செய்', 'இதைச் செய்யாதே' என்று அறிவுறுத்தும்போது நேரடியாக ஆணையிட்டும் அறிவுறுத்தலாம். மறைமுகமாகவும் அறிவுறுத்தலாம். ஊர்

ஓட ஒக்க ஓடு என்பது நேரடியாக 'இதைச் செய்' என்ற போக்கில் அமைந்த பழமொழி. ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே என்பது 'இதைச் செய்யாதே' என்று நேரடியாக ஆணையிடும் போக்கில் அமைந்தது.

'குந்தித் தின்றால் குன்றும் மாளும்' என்பது செய்தி சொல்லும் போக்கில் அமைந்திருந்தாலும், 'சோம்பேறியாக இருக்காதே', 'வருமானம் இல்லாமல் செலவு செய்யாதே' என்று அறிவுறுத்தும் போக்கில் அமைந்திருக்கிறது. 'கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழலாமா?' என்ற பழமொழி அழக்கூடாது, அழாதே என்று அறிவுறுத்தும் போக்கில் அமைந்திருக்கிறது. இது வினா வடிவத்தில் இருந்தாலும், உள்ளபடி இதில் வினா இல்லை. அறிவுறுத்தலே இதில் அமைந்திருக்கிறது.

'இல்லாமல் பிறக்குமா? அள்ளாமல் குறையுமா?' என்ற பழமொழி வினா வடிவில் அமைந்திருந்தாலும் 'இல்லாமல் பிறக்காது. அள்ளாமல் குறையாது' என்று செய்தி கூறும் போக்கிலேயே அமைந்திருக்கிறது. அறுக்க மாட்டாதவன் இடையில் அய்ம்பத்தெட்டு அரிவாளாம், ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம், ஆற்றோடு போனாலும் போவேன், ஓடக்காரனுக்கு அரைக்காசு தரமாட்டேன் என்றானாம். இவை போன்ற பழமொழிகள் கதை கூறும் போக்கில் அமைந்த பழமொழிகள். இவை கதை கூறும் போக்கில் இருந்தாலும் உள்ளபடியே செய்தி விளம்புவனவாகவும் அறிவுறுத்துவனவாகவுமே அமைகின்றன.

நாம் மேலே கூறிய கருத்துகள் பழமொழியின் அமைப்பைப் புரிந்து கொள்ள நல்ல அளவுக்குத் துணை புரியும்.

"தாயைப் போலப் பிள்ளை; நூலைப் போலச் சேலை", "பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன்" - என்பன போன்ற பழமொழிகள் மேலே கூறிய பழமொழிகளில் இருந்து

அமைப்பு முறையில் சற்று வேறுபட்டனவாகத் தோன்று கின்றன. இந்த பழமொழிகள் இரட்டைத் தொடர்களைப் பெற்றுத் தந்தவை.

'தாயைப் போலப் பிள்ளை; நூலைப் போலச் சேலை' என்ற இந்தப் பழமொழியில் இரண்டு தொடர்கள் ஒன்றிலிருந்து இன்னொன்றைப் பிரிக்க முடியாத அளவுக்கு தம்முள் தொடர்பு பெற்றனவாக அமைந்துள்ளன. இவற்றை இரட்டைத் தொடர்ப் பழமொழி என்று நாம் குறிப்பிடலாம்.

இங்கே கூறப்பட்ட செய்திகளைச் சுருக்கமாக நினைவு கூர்தல் தகும். பழமொழிகள் ஒவ்வொன்றும் கருத்து நிறைவு பெற்றதாக அமைந்திருக்கும். பழமொழிகள் செய்தி விளம்பும் போக்கிலும், அறிவுறுத்தும் போக்கிலும் அமைந்திருக்கும். பழமொழியில் உள்ள தொடர்கள் வினாத் தொடராக இருக்கலாம்; கதை கூறும் போக்கில் அமைந்த தொடராக இருக்கலாம்; இரட்டைத் தொடராகவும் இருக்கலாம். தொடரியல் நோக்கில் பார்த்தால் இவையெல்லாம் நாம் நினைவில் கொள்ளத்தக்க செய்திகள். இங்கே நாம் விளக்கிப் பேசிய இயல்புகளை உடையன மட்டுமே பழமொழிகள் என்பது கருதத் தக்கனவாக உள்ளன. அவற்றுள்ளும் செயற்கையான பழமொழிகள் இருக்கும்; போலிப் பழமொழிகள் இருக்கும். இலக்கியங்களில் இருந்து எடுத்தாளப் பெற்ற மேற்கோள் போன்ற வடிவங்களும் இருக்கும். அவற்றையெல்லாம் வேறு பிரித்து விளக்கினால் தான் உண்மையான பழமொழிகளை நாம் உணர்ந்து கொள்ள முடியும். பழமொழி போல் அமைந்துள்ள மரபுத் தொடர்களைப் பழமொழிகளிலிருந்து நீக்க வேண்டும் என்பதை முன்பே நாம் பேசியிருக்கிறோம்.

பழமொழிகளைச் சரியாக அடையாளம் கண்டு பிரித்தெடுப்பது பழமொழி ஆய்வுக்கு மிக இன்றியமையாத பணி.

சங்க காலத்தில் யானைகள்

வாணி அறிவாளன்,
எம்.ஏ., பி.எட்., சென்னை.

(தொடர்ச்சி சிலம்பு 80 - பரல் 2 - பக்கம் 35)

யானையைப் பரிசளித்தல்:

சங்க கால வேந்தரும், குறுநில மன்னரும் தங்கள் வள்ளன்மையைக் காட்ட, யானைகளைப் பரிசளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மன்னன் அகவன் மகளிர்க்கும், விறலியர்க்கும் யானைகளைப் பரிசளித்ததை,

> 'வெண்கடைச் சிறுகோல் அகவன்மகளிர்
> மடப்பிடி பரிசில் மான' (குறுந். 298:6-7)
> 'துடிஅடி அன்ன தூங்குடைக் குழவியொடு
> பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்க' (பொரு.126)

என இலக்கியங்கள் தெரிவிப்பதிலிருந்து, மகளிருக்கும் யானைகளுடன் தொடர்பிருந்ததை உணர முடிகிறது. முல்லை, மருத, நெய்தல் நில மகளிர் அவரவர் நிலம்சார் தொழில்களில் ஆடவருடன் ஈடுபட்டது போலக் குறிஞ்சி நில மகளிர் யானை வளர்ப்பில், அவற்றைப் பேணுவதில் பங்காற்றியிருக்கலாம்.

வள்ளல் ஓரி, வன்பரணரைத் தலைவராகக் கொண்ட பாணர் கூட்டத்திற்குக் களிறுகள் வழங்கியதால், அவர்கள் தமக்குரிய ஆடல் பாடலையே மறந்து சோம்பியிருந்தனர்

என்று புறநானூற்றுப் பாடல் (புறம். 153) கூறுகிறது. ஆய் அண்டிரன் யானைகளைப் பரிசிலர்க்கு வாரி வழங்கியதால், கட்டுந்தறி யானைகளில்லாமல் பொலிவிழந்து காணப் பெற்றதை (புறம்.127) ஏணிச்சேரி முடமோசியார் தம் பாடலில் விளக்குகிறார். இவ்வாறு மன்னர் யானைகளையும், யானைக் கன்றுகளையும், பாணர்க்கும், விறலியர்க்கும், அகவன் மகளிர்க்கும், புலவர்க்கும் பரிசளித்ததைக் காட்டும் பல சான்றுகள் இலக்கியங்களில் விரவிக் கிடக்கின்றன. இச்செய்திகளை நோக்கும்போது இரு கேள்விகள் எழும்.

1) பாடுவதையே தொழிலாகக் கொண்ட பாணரும், புலவரும், பரிசாகப் பெற்றவுடன் அப்புதிய யானை, (2) யானைகள் எவ்வாறு நெருக்கமாயின. எவ்வாறு ஓட்டிச் செல்ல முடிந்தது?

இக்கேள்விக்கு விடை கலித்தொகை மூலம் கிட்டுகிறது. சினம் மிக்க யானையும், யாழின் இசைக்குக் கட்டுப்பட்டு அமைதியாகி விடுமாம்(கலி-2:26-27) புலவர்தம் சொல்லாற்றலால் வேந்தரின் போர்க்குணத்தை விடச் செய்ததுபோல, தம் யாழிசையால், சினம்மிகு யானைகளைக்கூடக் கட்டுப்படுத்தியது அருமையான செய்தி. யாழ் மீட்டத் தெரிந்த புலவரும், பாணரும் யானையை அழைத்துச் சென்று தேவைப்படுபவரிடம் விற்று பொருள் பெற்றிருக்கலாம். ஏற்கனவே பரிசளிப்பவரின் கட்டுந்தறியில் கட்டப்பட்டுப் பயிற்சிகள் பெற்ற யானைகளென்பதால், முன்பே பழகிய பாகர் வழிக் கையாளுவதில் கடினமிருந்திருக்காது.

2) யானைகள் எவ்வாறு பெருஞ்செல்வமாக விளங்கின?

அ) நெருப்பிற்காகத் தேவைப்படும் ஏராளமான விறகுகளைக் காட்டிலிருந்து களிறுகள் மூலம் பெற்றதைச்

செந்தில் மேனிய முனிவர், வெண்கோட்டுக்
களிறு தரு விறகின் வேட்கும்,
ஒளிறு இலங்கு அருவிய மலைகிழவோனே. (பெரும்.499)

எனப் பெரும்பாணாற்றுப்படை தெரிவிக்கிறது.

ஆ) தினைக்கதிரடிக்கத் தினைப் புனங்களில் பயன்பட்டதை,

மென்தினை நெடும்போர் புரிமார்
துஞ்சுகளிறு எழுப்பும் தம் பெருங்கல் நாட்டே. (நற்-125:11-12)

என நற்றிணை அடிகள் எடுத்துரைக்கின்றன.

இ) யானைப்படை போர்ப்படைகளுள் முதன்மையாக விளங்கியமையால், போரினால் யானைகள் இழப்பு மிகுதியாக இருந்திருக்கும். யானைப்படை இன்றியமையாதலால், அப்படையைச் சீர்செய்ய, வலுப்படுத்தத் தேவைப்படும் புதிய யானைகளை குடிமக்கள் அரசுக்கு அளித்துப் பொருளைப் பெற்றிருப்பர்.

ஈ) வேழப்பழனத்து நூழிலாட்டு
கரும்பின் எந்திரம், கட்பின், ஓரை (மதுரை.257)
கணம் கால் வேழம் கதழ்வுற்றாஆங்கு
எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை. (பெரும்.259-260)

என்ற அடிகள், ஆண் யானைகள் கரும்பாலைகளில் இயந்திரத்தைச் செலுத்தப் பயன்பட்டுள்ளதைக் காட்டுகின்றன.

உ) யானையின் தந்தம் அறுத்தால் மீண்டும் வளரும் தன்மையுடையதாதலால், தந்தங்களைக் குறிப்பிட்ட இடைவெளி விட்டு, அறுத்து அவற்றை விலைப் படுத்தியிருப்பர். மக்கள் தந்தங்களை உயிருள்ள யானை களிலிருந்தும் (நற்-65:5-6), இறந்த யானைகளிடமிருந்தும் (நற்-114:1) பெறுவதை இலக்கியங்கள் அறிவிக்கின்றன. தந்தங்கள் ஒரு பண்டமாற்றுப் பொருளாகப் பயன்பட்டதைச்

செங்கோட் டாமான்ஊனோடு காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்கும்

(பதி.30:10-12)

என்ற அடிகள் மூலம் அறியலாம்.

ஊ) யானைகள் பாரம் சுமக்கப் பயன்பட்டன. போர் நேரங்களில், ஆயுதங்களையும், போர்ப்படையிலுள்ள வீரர்கட்கும், விலங்குகட்கும் தேவையான உணவுப் பொருட்களையும், போர்முனைக்குக் கொண்டு சென்றவை யானைகள்.

எ) யானை போக்குவரத்திற்கும் பயன்பட்டுள்ளது*. இதனை,

'தேரும் யானையும் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப.'

(தொல்.1158)

என்று, யானையும் தலைவன், தலைவியர்க்கு ஊர்தியாகப் பயன்பட்டதைத் தொல்காப்பிய நூற்பா குறிப்பிடுகிறது.

ஏ) யானைகள் புலிவேட்டைக்குப் பயன்பட்டுள்ளன. யானைகள் மீதேறிப் புலிவேட்டைக்குச் செல்லும்போது, புலிகள் இருக்குமிடங்களினருகில் செல்கையில் யானைகள் ஒருவித ஒலியெழுப்புமாம். அவ்வொலியைக் கேட்டவுடன், எச்சரிக்கையடைந்து, அம்பு, வேல் மற்றும் கவண்கல் முதலியவற்றைக் கொண்டு வேட்டையாடுவர்.

இங்ஙனம் யானைகள் பலப்பல வழிகளில் பயன் பட்டுள்ளதால் யானைகளையுடையோர் செல்வத்தை ஈட்ட முடிந்துள்ளது.

களிறு பெறு வல்சிப்பாணன் என்றும், மேலும்

யானையினத்தொடு பெற்றனர் நீங்கிப்
பசியாராகன் மாறுகொல் விசிபிணிக்

* ENCYCLOPAEDIA OF BRITANICA

கூடுகொள் இன்னியங் கறங்க
ஆடலுமொ ல்லார்தம் பா்டலு மறந்தே.

(புறம்-153)

என்றும் கூறும் புறநானூற்றுப் பாடலடிகள், யானைகளின் மூலம் பெற்ற பொருளைக் கொண்டே பாணர் வாழ்க்கையை நடத்த முடிந்ததைத் தெரிவிக்கின்றன. யானைகள் தம் உறுப்புகளாலும், உழைப்பாலும், வலிமையினாலும், மக்களுக்குச் செல்வத்தை வாரி வழங்கியமையோடு, மன்னர்களுக்கு நாட்டைக் காப்பாற்றவும் முதன்மையுடன் விளங்கியுள்ளன.

தொகுப்புரை:

1) சங்ககாலத்தில் காட்டிலுள்ள யானைக் கூட்டத்திலிருந்து யானைகள் பிடிக்கப்பெற்றுப் பிரிக்கப்பெற்று மக்களால் ஓம்பி வளர்க்கப்பட்டுள்ளன.

2) கட்டுந்தறியில் கட்டப்பட்ட புதிய யானைகளைப் பழக்கப்படுத்தப்பட்ட பழைய யானைகளைக் கொண்டே பயிற்சியளித்தனர்.

3) ஆரியப் பாகர் தமக்குரிய வடமொழியால் ஆணையிட்டு யானைகளைப் பயிற்றுவித்தனர்.

4) குறிஞ்சிநில மக்களால் யானைகள் பிடிக்கப்பட்டு, ஓம்பி வளர்க்கப்பட்டுள்ளன.

5) யானைகள் தம் உடம்பில் அம்பு ஆழப்புகுந்தாலும் தம் துன்பத்தைத் தாங்கிப் பகையை எதிர்க்கும் ஆற்றலுடையன.

6) களிற்றைப் போரில் கொல்லுதல் ஆண் மகனின் கட்மையாகக் கருதப்பெற்றது.

7) போரில் யானைகள் வல்லமையுடன் விளங்க, அவற்றிற்குத் தாராளமாகக் கள் வழங்கப் பெற்றது.

8) வீரர்கள் யானையுடன் போரிட, கையாள, பயிற்சி பெற்று விளங்கினர்.

9) போர் தொடங்கும்போது, களிற்றின் கூட்டத்தை முன்செல்லவிட்டுப் பகைவர் கூட்டத்தைக் குழப்பமடையச் செய்து, அப்பெரும் பிளவுகளிடையே வேலேந்திய வீரர் விரைந்து நுழைந்து அமருழக்கிப் படையை அழிப்பர்.

10) பகைநாட்டரசின் கோட்டை அதனை அழித்தும், அரணைச் சுற்றி அமைந்திருந்த நீர்க்கழிகளைக் கலக்கியும், அவற்றில் காணப்படும்.

11) யானைப்படையே, போரின் வெற்றி, தோல்விகளை முடிவு செய்தது.

12) யானைகள் மிகுதியாக உடைய மன்னர் சிறப்புடையவராகக் கருதப் பெற்றனர். பல்யானைச் செல்கெழுகுட்டுவனென்றும், யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்றும் மன்னர் யானைகளால் சிறப்புப் பெயர் பெற்று விளங்கினர்.

13) போரில் மன்னர் பட்டத்து யானை மீதேறிப் போர் செய்வர்.

14) பகை நாட்டரசனின், பட்டத்து யானையின் தந்தத்தை அறுத்துக் கட்டில் செய்யும் வழக்கமிருந்தது.

15) பகை நாட்டு, இறந்துபட்ட யானைகளின் பட்டயங்களை உருக்கிப் பொற்றாமரை செய்து பாணருக்கு வழங்கினர்.

16) குறிஞ்சிநில மகளிர், அவர்களின் நிலம் சார் தொழிலான யானை வளர்ப்பில் பங்கு கொண்டிருந்தனர்.

17) யானைகளின் சினம், யாழிசையில் அடங்கிவிடும்.

18) யானைகள், பாரம் சுமந்தும், தினைப்புனங்களில் தினைக் கதிரடித்தும், கரும்பாலைகளில் இயந்திரங்களியக்கியும், போர் முனைக்கு ஆயுதங்கள் சுமந்து சென்றும் எனப் பலவழிகளில் மனிதருக்குப் பயன்பட்டன.

19) தந்தங்கள் பண்டமாற்றுப் பொருளாக விளங்கியது. வயது முதிர்ந்த யானைகளின் கொம்புகளிற் காணப்பட்ட முத்துகள் விறலியர்க்குப் பரிசாக வழங்கப் பெற்றமை,

20) யானைகள் புலிவேட்டையில் பயன்பட்டமை,

21) தேரும், குதிரையும் போன்று யானையும் ஊர்தியாகப் பயன்பட்டமை,

ஆகிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

துணை நூல்கள்:

1. பத்துப்பாட்டு, நியூசெஞ்சுரி ஹவுஸ் வெளியீடு (1981)

2. குறுந்தொகை, பேரா.மு.சண்முகம் பிள்ளை (1985)

3. நற்றிணை, புலவர் நா.இராமையா பிள்ளை (1999)

4. பதிற்றுப்பத்து மூலமும், உரையும், டாக்டர் உ.வே.சா (1994)

5. தமிழர் சால்பு, டாக்டர் சு.வித்தியானந்தன் (1971)

துணைநின்ற கட்டுரை:

சங்க இலக்கியங்களில் களிறு, இரா.சிங்கராசா (2005) (ஆய்வுக் கோவை 2005)

பஞ்சாபில் கரிகாற் சோழன் கதை

முனைவர் இரா.மதிவாணன்

கரிகாலன் எனும் பெயரில் சோழ மன்னர் மரபில் பலர் சோழ நாட்டை ஆண்டிருக்கிறார்கள். வரலாற்றுக்கெட்டிய வரையில் காவிரிக் கரை அமைத்து கல்லணை கட்டிய கரிகால் வளவனுக்கு முன்பே கி.மு.ஐந்தாம் நூற்றாண்டளவில் வாழ்ந்த கரிகாலனே முதல் கரிகாலனாகக் கருதப்படுகிறது. தீயிடப்பட்டு கால் கருகியவனாகவும், இளஞ்சிறுவனாக இருந்த போதே அரியணை ஏறியவனாகவும் கூறப்படுபவன் இவனே! இவனுடைய அறிவு நுட்பமும், நீதி வழங்கும் திறனும் அக்காலத்திலேயே இந்தியா முழுவதும் அறியப்பட்டிருந்தது. பஞ்சாப் மாநிலத்தில் நகர்ப்புறங்களிலும், சிற்றூர்ப் புறங்களிலும் தலையில் நரைமுடி புனைந்து முதியவன்போல் தோன்றி நீதி வழங்கிய கதை இன்றும் வழங்கி வருகின்றது. இந்தியில் எழுதப்பட்ட பாடநூல்களில் பஞ்சாபு நாட்டுப்புறத்தில் இக்கதையை அலெக்சாண்டர் நேரில் கேட்டு வியப்புற்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. அலெக்சாண்டர் இந்திய எல்லையில் படையெடுத்த காலம் கி.மு.327. கி.மு.நான்காம் நூற்றாண்டிறுதியில் இக்கதை பஞ்சாபில் வழங்கியிருந்தால், தென்னாட்டில் இக்கதைக்குரிய கரிகாலன் கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவனாதல் வேண்டும்.

கரிகாற் சோழன் சிறுவனாக இருந்த இளம்பருவத்திலேயே அரசாளும் பொறுப்பேற்றான். அவனிடம் நீதி கேட்டு வழக்குரைக்க வந்த இரு முதியவர்கள் அரசரை நேரில் பார்த்ததும், வயதில் மிகச் சிறிய

இளைஞன் நம்முடைய சிக்கலான வழக்கை எப்படித் தீர்க்கப் போகிறான் என்று தம் வழக்கை எடுத்துரைக்கத் தயங்கினர். இதனைக் குறிப்பால் உணர்ந்த கரிகாலன் அரண்மனையினுள்ளே சென்று நரைத்த தலைமுடியைப் புனைந்து தடி ஊன்றி கொண்டு கிழவரைப்போன்ற தோற்றத்தோடு அரியணையில் வந்து அமர்ந்தார். இதனைக் கண்ட முதியவர்கள் அரசனுக்கு மாற்றாக முதியவர் ஒருவர் வந்திருக்கிறார் என்ற நம்பிக்கையோடு தம் வழக்கை எடுத்துரைக்கிறார்கள். முதல் கிழவர் இரண்டாம் கிழவருக்கு ஒரு நிலத்தை விற்றார். விற்ற நிலத்தில் புதையல் கிடைத்தது. ஆதலால், விற்ற நிலத்தாருக்கே அது உரிமையாகும் என்பதால் இரண்டாம் கிழவர் அந்தப் புதையலை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். ஒரு நிலத்தை விற்ற பிறகு அந்நிலத்தில் உள்ளவை அனைத்தும் வாங்கியவருக்கே உரிமையாதலால் நிலத்தை விற்ற முதல் கிழவரும் அந்தப் புதையலைத் தனக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டார். இந்நிலையில் புதையலை யாருக்கு கொடுப்பது என்ற சிக்கலான வினாவுக்குக் கரிகாற்சோழன் மிகத் திறமையான விடை கண்டுபிடித்து இருவரும் மகிழும்வண்ணம் தீர்ப்பளித்தான். முதல் கிழவருக்குப் பெண்ணும், இரண்டாம் கிழவருக்குப் பையனும் திருமண வயதில் இருப்பதால் அவ்விருவருக்கும் திருமணம் செய்வித்து அப்புதையலை அவர்களுக்குக் கொடுத்து விடும்படி மன்னர் தீர்ப்பளித்தார். இதனைத் தனிப்பாடல் ஒன்று சிறப்பாகக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

"உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்."

இப்பாடல் கரிகாற்சோழனின் நீதி வழங்கும் அறிவு நுட்பத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது. இந்தக் கதை பஞ்சாப் மாநிலம் வரை பரவியிருப்பது தமிழர்களின்

நாகரிகப் பண்பாட்டுப் பரவல்களையும் வணிக ஊடாட்டங்களையும் சிந்துவெளி நாகரிகக் காலம் முதல் தொடர்ந்து வரும் தமிழர் வரலாற்றுச் சங்கிலிப் பிணைப்புகளையும் எடுத்துக்காட்டுகிறது. அலெச்சாண்டர் காலத்தைய கதையில் கரிகாலன் பெயர் சூட்டப்படாமல் அலெக்சாண்டர் திடுமென ஒரு சிற்றூருக்குப் போனபோது அந்த ஊர்த் தலைவனே இத்தகைய கதையை எடுத்துச் சொன்னதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மராட்டியம், குச்சரம், பஞ்சாபு, இராசபுதனம், கங்கைச் சமவெளி போன்ற பகுதிகளில் மனுநீதிச் சோழன், சிபி மன்னன் போன்றவர்களின் கதைகளும் தமிழ்நாட்டுக்கே உரிய சிறுவர் விளையாட்டுப் பாடல்களும், முருக வழிபாட்டு நடைமுறைகளும், பிற்காலத்தில் மாரியம்மன் விழாவாகக் கொற்றவை வழிபாடுகளும், தமிழுக்கே உரிய கார்த்திகை விளக்கேற்றுதல், கூடுதுறைகளில் (ஆற்றுச்சங்கமம்) நீராடுதல், காப்புநாண் கட்டுதல், பொங்கல் பண்டிகையாகிய அறுவடை விழா, முதன் முதலாக நிலத்தில் ஏர் கட்டும்போதும், அறுவடை செய்யும்போதும் நிலத்தின் வடகிழக்கு மூலையில் பணி தொடங்குதல் போன்ற பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் தமிழ்நாட்டிலிருந்து வட இந்தியா முழுமையும் பரவியிருக்கின்றன. கி.மு.ஆறாம் நூற்றாண்டில் கௌதம புத்தர் கற்றுக்கொண்ட மொழிகளில் தமிழும் ஒன்று என இலலிதவித்தாரம் நூலில் கூறப்பட்டிருப்பதாலும் தமிழுக்கே உரிய ஐந்திறம் எனும் இலக்கண நூலைத் தொல்காப்பியரைப் போன்றே சாரிபுத்தரும் முழுமையாகப் படித்தவரெனக் கூறப்படுதலாலும், ஆரிய அரசனாகிய யாழ்ப்பெருந்தத்தன் (பரமதத்தன்) கபிலர் வாயிலாகக் குறிஞ்சிப்பாட்டு எழுதித்தரக் கேட்டதனாலும் வடநாட்டில் தமிழ்ப்பண்பாடு மட்டுமன்றி தமிழ்க்கல்வியும் சிறந்து விளங்கியதை நன்குணரலாம். இத்தகைய வரலாற்றுச் செய்திகள் பற்பல இன்னும் வெளிப்படாமல் மறைந்துள்ளன.

பாவைமார் ஆரிக்கும் பாடல்

புலவர் நா. தண்டபாணி, அம்பல்

சிலப்பதிகாரம் என்னும் பெயரை நினைக்கும் பொழுதே ஏற்படும் உள்ளுணர்வு வரலாற்றுணர்வோடு கூடிய புத்துணர்வையும் எழுச்சியையும் தருகின்றது. எத்துணையோ கருத்துவளத்தை உள்ளடக்கி எத்தனையோ செய்திகளை அளிக்கின்றது இரு சொற்களால் ஆகிய தொடர்.

நூலுக்குள் புகுந்துவிட்டாலோ அம்மம்மா! எத்தனை எத்தனை இனிய செய்திகள்! ஐம்பெருங்காப்பியங்களுள் தலைசிறந்த இது, 'குடிமக்கள் காப்பியம்' என்றும், 'இயலிசை நாடகப் பொருள் தொடர் நிலைச் செய்யுள்' என்றும், 'முத்தமிழ்க்காப்பியம்' என்றும் பல பெயர்களால் பாராட்டப்படுகின்றது. மேற்காணும் ஒவ்வொரு பெயரும் ஆழ்ந்த, பரந்த கருத்துகளை உள்ளடக்கியதாகும். மேலும், இதற்கு 'ஒருமைப் பாட்டுக் காப்பியம்' என்னும் பெயரும் உண்டு. அப்பெயர் எங்ஙனம் பொருந்திவரும் என்பதனைப் புதிய முறையில் ஆய்ந்து மகிழ்வோம்.

ஆசிரியர் இளங்கோவடிகள் அரிய பெரிய கனவு கண்டார். அக்கனவு பல கனவுகளைப் போல வெறுங் கனவாகப் போய்விடவில்லை; நனவாகிவிட்டது; பின்னும் அது செயலாகிவிட்டது. செயல் வெற்றியும் பெற்றுவிட்டது. அவருடைய ஒருமைப்பாட்டுக் கருத்துகள் சிலம்பில் எங்கெங்கும் ஒலிக்கின்றன. இருப்பினும், சிலம்பின் இறுதிக் காண்டமாகிய வஞ்சிக் காண்டத்தில் ஈற்று அயல்

காதையாகிய 'வாழ்த்துக் காதை'யில் அவ்வொருமைப் பாட்டுச் சிறப்பு மிகச் சிறப்பாகப் பளிச்சிடுகின்றது.

சிலம்பில் எண்வகைச் சுவையும் இயைந்து பொதுளியிருப்பினும் அவலச் சுவையே ஏனையவற்றினும் விஞ்சியிருக்கின்றது என்பதனை யாரும் மறுக்க மாட்டார். 'சிலம்பு ஓர் அவலக் காப்பியம்' என்றாலும் அது மிகையாகாது. இருப்பினும் இளங்கோ தரும் அந்த அவலம் மனத்தை அமைதிப்படுத்துகின்றது; தூய்மைப்படுத்து கின்றது.

பூம்புகாரைவிட்டுக் கோவலனும் கண்ணகியும் யார்க்கும் சொல்லிக் கொள்ளாமலே புறப்படுகின்றனர். இச்செய்தி கண்ணகியின் பெற்றோர்க்கும் கோவலனின் பெற்றோர்க்கும் தெரியாது. உற்றோரைவிட்டு மற்றோரை விட்டு உறவினர் பலரையும் விட்டு அவர்கள் பிரிந்ததே நெஞ்சை உறுத்தும் நிகழ்ச்சியாகும்.

அதற்குமுன் மூதாதையர் ஈட்டிய ஒரு பகுதிச் செல்வத்தையும் தனக்கென்று சேர்த்த செல்வத்தையும் விட்டது ஒரு பெருந்துன்பம். இவற்றிற்குமுன் அவன் கண்ணகியை விட்டுப் பிரிந்தது குறிப்பிடத்தக்க கொடுந் துன்பம். அவன் மாதவியை விட்டுப்பிரிந்ததும் மாதவிக்கு அவலந்தான்.

மதுரைக்குச் செல்லும் வழியில் இடையில் வந்த கோசிகன், மாடலன் ஆகியோர் சொன்ன செய்திகள் மேலும் மனத்துக்குத் துன்பம் அளிப்பவையாகும். கோவலன் மதுரையில் முறை சிறிதும் இன்றிக் கொல்லப்படுகின்றான். அது கேள்வியுற்ற கண்ணகிக்கு மனநிலை எப்படியிருக்கும்? அழுதாள்; துடித்தாள்; அரற்றினாள். (ஆயினும், அக்காலக் கற்புடைப் பெண்டிர் முறைப்படி) உடனே இறக்கவில்லை. இறந்திருந்தால், உண்மை, நேர்மை, நீதி ஆகியவை உலகில் ஒளிவீசியிருக்கமாட்டா; கணவன் திருடன் என்று எவனாலோ

எழுப்பப்பட்ட தன்னலத்தோடு இயைந்த பொய்மைச் செய்தி உண்மையென்றுகூட உலகால் நம்பப்பட்டிருக்கும்.) பழமையில் தோய்ந்த புதுமைப் பெண்ணாகிய பூம்புகார் நங்கை பாண்டியனிடம் சென்று முறையிடுகின்றாள். உண்மையுணர்ந்த பாண்டியன், எப்படியோ நேர்ந்துவிட்ட கொடுமையை எண்ணி உயிர் துறக்கிறான். அவன் மனைவி கோப்பெருந்தேவியும் உடன் உயிர் துறக்கின்றாள். பாண்டியன் இறப்பு வாயிலாக நீதி - அறம் நிலைநாட்டப்படுகின்றது.

தம்மிடம் அடைக்கலமாக வந்த கண்ணகியையும் கோவலனையும் முறையாகப் பேணிக்காக்க முடியவில்லையே என வருந்திய மாதரி உயிர் துறக்கின்றாள்.

அவள் மகள் - சில நாள்கள் கண்ணகிக்குத் தோழியாக, உதவியாக இருந்த ஐயை புலம்பி அழுது பித்துப் பிடித்தவள் போலாகின்றாள். (இவர்கள் கண்ணகிக்கும் கோவலனுக்கும் நேர்ந்துவிட்ட பெருங்கொடுமைகட்கு இம்மியளவும் காரணமானவர் அல்லர். இருப்பினும், கண்ணோட்டம் என்னும் கழிபெருங்காரிகை உலகை இயக்கிக் கொண்டிருக்கின்றது.)

பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த சோழ நாட்டுக்கும் செல்ல மனமில்லை; தம்மைக் கொடுமைப்படுத்திய பாண்டிய நாட்டிலும் இருக்க மனங்கொள்ளவில்லை. கண்ணகி, சேர நாடு நோக்கிச் செல்கின்றாள். புகாரிலிருந்து கணவனோடும் பின் கவுந்தியடிகள் துணையோடும் மதுரைக்கு அமைதியாகப் பையவந்த கண்ணகி இப்பொழுது வையையாற்றின் கரையில் மேற்கு நோக்கிப் பெருநடையும் ஓட்டமுமாகச் செல்கின்றாள். சேர நாடு சென்று திருச்செங்கோட்டு மலையேறி ஒளியிற் கலந்து மறைந்தாள். அவள் மறைவைக் கண்ட மலைவாழ் மக்கள் ஒன்றும் புரியாது வருந்திக் கலங்குகின்றனர்.

கோவலன் சாவினையும் கண்ணகி மறைவினையும் மதுரை எரிப்பினையும் கேள்வியுற்ற கோவலன் தந்தை மாசாத்துவனும் கண்ணகியின் தந்தை மாநாய்கனும் துன்பம் பொறுக்க இயலாமல் கலங்கித் துறவு பூண்கின்றனர். கண்ணகியின் தாயும் கோவலன் தாயும் தம்மக்கள் மறைவைக் கேட்டு அவலத்தில் மூழ்கித் துடித்து உயிருடன் வாழ மனமின்றி உயிரையே விடுகின்றனர். பெண்மை மனம் ஆண்மை மனத்தினும் மெல்லியதுதான் போலும்!

கோவலன் காதலி மாதவி, நேர்ந்துவிட்ட கொடுந்துயர் கேட்டு வருந்தித் துன்பத்தில் மூழ்கி (பல்வகைக் கொடுமைக்கும் தான் ஒரு காரணி என்பதை உணர்ந்து) புலம்பிப் புத்த சமயத்தில் சேர்ந்து பொதுத் தொண்டாற்று கின்றாள். கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலை தன் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் நேர்ந்த துயரங்களை யறிந்து புத்த சமயத்தில் சேர்ந்து தொண்டாற்றுகின்றாள். மிகமிக இளமையான அகவையிலேயே அவள் துறவு பூண்டது சூழ்நிலைத் தாக்கமே,

முன்னரே, கோவலன் கொலையுண்டது முதலியவற்றை மாடலன் மூலம் கேள்வியுற்ற கண்ணகியின் செவிலித்தாயும் அவள் அடித்தோழியும் பூம்புகாரிலிருந்து மதுரையடைந்து அங்கே கண்ணகியைக் காண இயலாமல் மாதரி மகள் ஐயையைக் கண்டு அவளையும் அழைத்துக் கொண்டு வையைக் கரை வழியே சேரநாடு சேர்கின்றனர்; கண்ணகிக் கோயிலை அடைகின்றனர். அங்கு அவர்கள் சேர வேந்தன் செங்குட்டுவனைக் கண்டு தம்மை இன்னார் என அறிமுகப்படுத்திக் கொள்ளுகின்றனர்; அடக்க முடியா அவலத்தால் எல்லாரும் ஏங்கி வருந்திப் புலம்பி அழுகின்றனர்.

கோவலன், இரக்கமின்றி முறையற்று வெட்டுண்டு வீழ்ந்ததிலிருந்து மதுரை எரிந்த காலந்தொட்டுப் பாண்டிய

நாட்டில் மழை குறைந்து நின்றது. எனவே, வறுமையும் நோயும் மக்களை வாட்டின. இதனை உணர்ந்த கொற்கைப் பாண்டியன் இளஞ்செழியன் எய்தவன் இருக்க அம்பை நோவது போல் ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டுக் களவேள்வி செய்தான்.

இங்ஙனம் சிலம்பில் எங்கு நோக்கினும் அவலச் சுவை மண்டிக் கிடக்கின்றது. இந்த அவலம் புகார்க்காண்டத்தி லேயே தொடங்கிவிட்டது. இது மதுரையைப் பற்றி வஞ்சிக் காண்டம் வரை சென்று இருக்கின்றது. இத்தகைய அவலச் சுமையை ஓரளவேனும் குறைத்தால் நலமாயிருக்கும் எனத்தோன்றியதால் சேர மன்னன் கண்ணகிக்கு விழா எடுத்தான். பத்தினிக்கோட்டம் சிறப்புற அமைக்க பெற்றது. இவ்விழாவுக்குச் சேரன் பன்னாட்டு மன்னர்க்கும் அழைப்பு விடுத்திருந்தனன். (விழாவுக்கு வந்திருந்த மன்னரும் வாராத மன்னர் சிலரும் தத்தம் நாடுகளில் பத்தினிக்கோட்டம் சமைத்து விழா எடுத்தனர்.)

இங்ஙனம் கற்புடைப் பெண்ணுக்குக் கவின்விழா நடத்திய, கோயில்கண்ட செங்குட்டுவனைப் பாராட்டிப் போற்றி ஒரு விழா அமைக்கப்பட்டது. இவ்விழாவுக்கு எந்நாட்டு மன்னற்கும் சேரன் அழைப்புவிடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது அவனுடைய பெருந் தன்மையையும் அடக்கத்தையும் காட்டுகின்றது. இவ்விழா வாழ்த்துக் காதையில் வளத்தோடு விளக்கப்படுகின்றது. இவ்விழாவில் சேர நாட்டு மகளிர் மட்டுமின்றிப் பாண்டி மண்டலத்து மகளிரும் சோழப் புலத்துப் பெண்டிரும் கலந்து கொள்கின்றனர்.

பல்வகை ஆடல்பாடல்கள், உரைகள் நிகழ்கின்றன. யாருக்காக விழா நடத்தப்படுகின்றதோ பெரும்பாலும் அவன் மட்டும் வாழ்த்தப்படுதலும் வணங்கப்படுதலும் போற்றப் படுதலும் இன்றும் அன்றும் என்றும் வழக்கம். இங்கோ,

செயற்பாடு புதுமையாயிருக்கின்றது. பாண்டியனும் சோழனும் விழாவில் பாராட்டி வாழ்த்தப்படுகின்றனர். மூவர்தம் மலையும் மாலையும் கொடியும் மரமும் பூவும் இன்னும் சில கருப்பொருள்களும் போற்றிப் புகழப் படுகின்றன. அவை ஒத்த அளவில் சரிசமமாகப் பாராட்டப்படுகின்றன. மூவர் தஞ்செயற்பாடுகளும் போற்றி முழங்கப்படுகின்றன. மூவரையும் பொதுப்படப் பாராட்டிய நிலை முடிந்தது. 'இனி, நாம் எல்லாரும் சேர்ந்து பூவிரி கூந்தல் புகார்க் காவிரிநாடனை - சோழனைப் பாடி ஆடுவோம்'' என முந்நாட்டு மகளிரும் சொல்லிச் சோழனுக்கு அம்மானை வரிப்பாடல்கள் இசைக்கின்றனர். அடுத்து, பாண்டியற்குக் கந்துகவரி (பந்தாட்டப்பாடல்) மூன்று இசைத்து ஆடல் நடைபெறுகின்றது. இறுதியில் சேர மன்னற்கு ஊசல்வரி (ஊஞ்சற் பாடல்கள்) பாடப்படுகின்றன; ஏற்ற ஆட்டமும் நடைபெறுகின்றது. இங்ஙனம் அம்மானைவரியும் கந்துகவரியும் ஊசல்வரியும் சோழற்கும் பாண்டியற்கும் சேரற்கும் ஆடலோடு தனித்தனியே இசைக்கப்பட்ட பின் மீண்டும் பொதுப்பட மூவரையும் போற்றி இசைத்துப்பாடி ஆடும் 'வள்ளைக்கூத்து' இடம் பெறுகின்றது.

(இற்றைய நாளைய விழாக்களில் பாராட்டப்படும் தலைவர்கள் முதலிலும் இறுதியிலும் சிறப்புறப் போற்றப்படுகின்றனர். சற்றேறக்குறைய இவ்வழக்கம் அற்றை நாளிலும் இருந்திருக்கின்றது.)

'வள்ளைப்பாட்டு' என்பதற்கு 'உலக்கைப்பாடல்' என்பது பொருள். உரலில் நெல்லையிட்டோ வேறு கூலங்கள் (தானியங்கள்) இட்டோ பெண்டிர் உலக்கையால் குற்றி அரிசி எடுப்பர். நடவு நடும் பொழுதும் உழும் பொழுதும் ஏற்றம் இறைக்கும் போதும் விளையாடும் போதும் இசைத்துக் கொண்டே செயல் நடைபெறுவது போல குற்றும் பொழுதும் உலக்கை ஓசையும் ஒத்துவர இசைப்பர் பெண்டிர்.

இது வள்ளைப்பாடல். வாழ்த்துக்காதையில் இதுதான் இறுதியாக இடம்பெறும் பாடல். அம்மானை சோழனுக்கும் கந்துகம் பாண்டியனுக்கும் ஊசல் சேரனுக்கும் அமைந்ததுபோல அன்றி வள்ளை மூவர்க்கும் அமைந்திருக்கின்றது.

வள்ளைப்பாடல்களுள் முதற் பாடல்:

'தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழல் அவைப்பார் புகார் மகளிர்
ஆழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்தார்ப்
பாழிப்படவரைத்தோள் பாடலே பாடல்
பாவைமார் ஆரிக்கும் பாடலே பாடல்'

இங்கு கரும்புஉலக்கையாகின்றது. முத்துமணிகள் தானிய மணிகளாகின்றன. மருதத் திணைக் காஞ்சிமரம் சிறப்பிடம் பெறுகின்றது. அதன் கொழுவிய நிழலில் புகார் மகளிர் குற்றியாடுகின்றனர்.

இப்பாடலில் உள்ள, 'பாவைமார் ஆரிக்கும் பாடல்' என்பதில் தான் கருத்து வேற்றுமையும் எழுகின்றது; ஒத்த கருத்து வளமும் அமையாமல் போகின்றது. இஃது இளங்கோவடிகளின் குறையன்று; பிற்காலத்தில் யாரோ, தெரிந்தோ தெரியாமலோ செய்துள்ள குறையாகும். சிலப்பதிகாரம் சிறந்த ஒருமைப்பாட்டுக் காவியம். அதனுள் வாழ்த்துக்காதை தான் அவ்வொருமைப்பாட்டை மிகுதியும் திரட்டியும் உருட்டியும் தருவது. அதிலும் இறுதியில் அமையும் வள்ளைப்பாட்டுதான் ஒருமைப்பாட்டினை முத்தாய்ப்பாக எடுத்துக்காட்டுவது. ஆனால், அவ்வள்ளைப் பாட்டின் தொடக்கத்தில் வரும் இறுதி அடியாகிய 'பாவைமார் ஆரிக்கும் பாடலே பாடல்' என்பது தான் நிறைவைக் குறைவு படுத்துகின்றது.

'ஆரிக்கும்' என்பதற்கு ஆர்ப்பரிக்கும், ஆரவாரிக்கும் எனப் பொருளும் உண்டு. எனினும் அது மிகமிக அருகியே

வருகின்றது. 'ஆர்க்கும்' என்னும் வழக்காறு தான் மிகுதி. அஃது 'ஆர்க்கும்' என இருத்தல் வேண்டும் என எண்ணியோ என்னவோ ரகர ஒற்றினை ரகர இகரமாக மாற்றப் பட்டிருக்கின்றது. அப்படியே செஞ்சொல்லாகிய 'ஆர்க்கும்' இடம் பெறினும் கருத்து வளமும் கருத்தொருமைப்பாடும் குன்றிப்போகும்.

சோழனை அடுத்துப் பாண்டியனும் சேரனும் இடம் பெறுகின்றனர். அவர்கள் பாக்களில் முதற் பொருள்களும் கருப்பொருள்களும் நன்கு இடம்பெறுகின்றன. மதுரை, பஞ்சவன் (பாண்டியன்), மீன்கொடி, வேம்பு மாலை முதலிய பாண்டிய நாட்டுப் பொருள்கள் இடம்பெறுகின்றன. சேரன் பாட்டில், வஞ்சி மாநகரம், யானைக்கோடு, கடப்பம்பூ, பனம்பூமாலை முதலியன இடம் பெறுகின்றன.

'போந்தை வேம்பே ஆர்எனவரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்'

என்னும் அடிகள் சேரன் மாலையினையும் (போந்தை) பாண்டியன் மாலையினையும் (வேப்பமாலை வேப்பம் பூமாலை) சோழன் மாலையாகிய ஆத்திமாலையினையும் (ஆர்-ஆத்தி) குறிப்பிடுகின்றன.

'வேப்பந்தார் நெஞ்சுணக்கும் பாடலே பாடல்' என்றும்

'பனந்தோடு உளங்கவரும் பாடலே பாடல்' என்றும் பாண்டியன் மாலையினையும், சேரன்மாலையினையும் குறிப்பிட்ட இளங்கோவடிகள் சோழனுடைய ஆத்தி மாலையைக் கூறாமல் இருப்பாரா? கூறியிருக்கின்றார். நாம் தவறாகப் புரிந்து கொண்டு பாட்டிலே புது ஆர்ப்பாட்டம் புகுத்திவிட்டோம்' 'பாவைமார் ஆரிக்கும்' என்பது பாவைமார் 'ஆர் இரக்கும்' என இருந்திருத்தல் வேண்டும். ஒருவனுடைய மாலையை ஒருத்தி விரும்புகின்றாள் எனில் அவனை அவள் விரும்புகின்றாள் என்று பொருள். இத்தகைய நிகழ்ச்சிகள் காப்பியங்களில் மட்டுமா? முற்காலச் சங்க

இலக்கியங்களிலும் பிற்காலக் கோவை, பரணி, உலா இலக்கியங்களிலும் நிரம்ப இடம் பெறுகின்றன.

இங்கு 'பாவைமார் ஆரிரக்கும்

பாடலே பாடல்' என இருப்பதே பொருத்தமும் தகுதியும் ஆகும். 'ஆரிக்கும்' என்பதில் ஏதோ கருத்து இருப்பது போலத் தோன்றினும் அஃது அணுவளவும் ஏற்புடையதன்று. இதனை எல்லாரும் நடுவு நிலைமையோடு எண்ணிப் பார்ப்பாராக! ஆவன செய்வாராக!

செந்தமிழ்ச் செல்வி
80ஆம் ஆண்டு தொடக்கம்

தமிழ் இலக்கியம், இலக்கணம், சமயம், வாழ்க்கை, வரலாறு போன்ற பல்துறை ஆய்வுக்கட்டுரைகளைத் தாங்கி 79 ஆண்டுகளைக் கடந்து 80ஆம் ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளது. அன்பர்கள் அனைவரும் ரூ. 70 ஆண்டுக் கட்டணம் செலுத்தி ஆதரவு நல்க வேண்டுகிறோம்.

செல்விப்பணி தொடர ரூ. 700/- மட்டும் செலுத்தி வாழ்நாள் உறுப்பினரானால் பேருதவியாக இருக்கும்.

- ஆசிரியர்

இலக்கணச் சொற்களஞ்சியம்

- கொற்கையூரன் -

அண்மையில் தமிழ்மண் பதிப்பகத்தாரால் வெளியிடப்பெற்ற இலக்கணச் சொற்களஞ்சியம் (17 தொகுதிகள்) தமிழ் அறிஞர்களுக்கும் இலக்கணம் பயிலும் மாணவர்கட்கும் பேருதவியாக அமையும். மூவாயிரம் ஆண்டுகள் இடையறாது பயிலப்பெறும் தமிழ் மொழியின் கட்டுக்கோப்பைக் கட்டிக்காப்பவை தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களே. இவற்றில் இடம்பெற்றுள்ள இலக்கணக் கலைச் சொற்களுக்கு உரிய விளக்கத்தை இருபது ஆண்டுகட்கு மேல் கடுமையாக உழைத்து இக் களஞ்சியத்தை உருவாக்கியுள்ளவர் இலக்கணக் கடல் திருமிகு. தி.வே. கோபாலையர்.

சங்க இலக்கியங்களையும், காப்பியங்களையும், தொல்காப்பியம், நன்னூல் முதலான இலக்கண நூல்களையும் கரைத்துக் குடித்தவர் இவர். எந்த இடத்தில் எதைக் கேட்டாலும் அங்கேயே அப்பொழுதே அதைச் சொல்லக்கூடிய ஆற்றல் பெற்ற இவரை 'நூற் கடல்' என்று தமிழறிஞர்கள் பாராட்டுவர். ''தொண்ணூற் கடலில் துறைகள் தொறுமூழ்கி யாங்குப் பன்னூற் கடலின் பரப்பை அளந்து உயர்வு கண்டவர்.''

திருவையாறு கல்லூரியில் வித்துவான் தேர்வு பெற்றபின் திருப்பனந்தாள் கல்லூரியிலும் தாம் பயின்ற திருவையாறு கல்லூரியிலும் பணியாற்றியவர். அதன் முதல்வராக பணியாற்றி ஓய்வுபெற்றபின் புதுவையிலுள்ள பிரஞ்சிந்திய நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். தமிழ், வடமொழி, ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற பலமொழிகளில் தேர்ச்சி பெற்ற இவர் அப் பிரெஞ்சு நிறுவனம் வெளியிடும் அனைத்து வெளியீடுகளும் சிறப்பாக வெளிவரத் துணை நிற்கிறார். சீவகசிந்தாமணியில் நிரம்பப் பற்றுடையவர்.

வடமொழி இலக்கணம் வளைந்து கொடுக்காத இயல்புடையது. தமிழ் மொழியோ காலத்துக்கேற்ற 'பழையன

கழிதலும், புதியன புகுதலும் வழுவல' என்ற அடிப்படையில் புதிய புதிய இலக்கண நூல்களைப் படைத்து அதை வழக்கிலுள்ள மொழியாக்கிக் கொண்டுள்ளது. 'தொல்காப்பிய'த்தியன் மையக் கோட்பாடு பழுதுபடாமல் சிற்சில மாறுதல்களுடன் அவ்வப்போது நூல்கள் வர வேண்டும்' என்பது இவர்தம் கருத்து.

வட இந்திய மொழிகள் சமஸ்கிருதத்தை அடிப் படையாகக் கொண்டிருந்தாலும் தென்னிந்திய மொழிகள் இவற்றினின்று வேறுபட்டவை. ''தென்னிந்தியாவைப் பொறுத்தவரை எல்லாவற்றிற்கும் மூல மொழியாக ஒன்று இருந்திருக்கிறது. அம் மொழியைத் திராவிடம் என்றுதான் அழைக்க வேண்டும். அந்த மொழியின் மூலக்கூறுகள் பலவற்றைத் தமிழ் எடுத்துக் கொண்டது. மூலமொழியின் சிறப்பியல்புகளைப் பெரும்பாலும் எடுத்துக் கொண்டதால் தான் தமிழ் தென்னிந்திய மொழிகளுள் முதன்மை மொழியாக விளங்கி வருகிறது. இந்தக் காரணத்தினால்தான் தனித்து இயங்கும் இயல்பு பெற்றது தமிழ்.

மற்ற தென்னிந்திய மொழிகள் அனைத்துமே இலக்கணத்தைப் பொறுத்தவரை வடமொழியின் திட்ட வரையறையைப் பின்பற்றுபவை. இதற்கு முதன்மையான காரணம் வல்லின மெல்லின ஒலிகளுக்கு அந்த மொழிகள் சமஸ்கிருதத்தை அடியொற்றுவது. தமிழில் உச்சரிப்பு மொழியில் இயல்பிலேயே அமைந்திருப்பதால் அது தனித்து இயங்கும் வல்லமை படைத்தது.

வடமொழி யாராலும் பேசப்படாத மொழி. சமஸ்கிருதம் என்றாலே திருத்தியமைக்கப்பட்டது என்று பொருள். அந்தக் காலத்தில் அறிஞர்கள் தத்தமது கலாசாரத்தின் பரிமாற்றத்திற்காக ஏற்படுத்திக் கொண்ட மொழி வடமொழி. இதில் மிகவும் குறிப்பிடவேண்டியது வடமொழியைப் பெரிதும் ஆதரித்து வளர்த்தவர்கள் தமிழர்களே.

தமிழைப் பொறுத்தவரை அது செம்மொழியாக இருந்தபோதிலும் அது பேசு மொழியாகவும் இருந்து வருகிறது. அவ்வப்போது காலங்களின் தன்மையை ஒட்டிப் பிரயோகத்தில் மாற்றங்கள் நிகழலாமே தமிழ் மொழி முற்றிலும் அழிந்துவிடுவதற்கான வாய்ப்பு இல்லை.'' இவை இலக்கண வித்தகர் கோபாலையரின் கருத்துகள்.

மதிப்புரை

முகங்கள் - செவ்வேள் - செவ்வேள் பதிப்பகம்,
89 பாரதிதாசன் வீதி, முத்தியால்பேட்டை,
புதுச்சேரி - 605 003, 96 பக். விலை. ரூ. 36/-

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் பலரைச் சந்திக்க, பலரிடம் நெருங்கிப் பழக வாய்ப்பு ஏற்படும். அந்த அனுபவங்களைக் கவிதை வடிவில் வடிப்பது நல்ல முயற்சி. நூலாசிரியர், கவிஞர் புதுவை சுப்பிரமணியம் என்னும் செவ்வேள் தனித்தமிழ் அன்பர். அன்பானவர், பண்பானவர், அடக்கமானவர். பெரும்பாலும் புகழ் பெற்றவர்களைப் பற்றியும் ஊரறிந்தவர்களைப் பற்றியுமே கவிதை இயற்றுவர். பாவலர் செவ்வேள் சற்று வேறுபட்டவர். பெரியோர்களை வியந்து பாடுகிறார். சிறியோரை, தாம் அறிந்தவரை மட்டுமே பாடத் தயங்கவில்லை. ஒவ்வொரு கவிதைக்கு முன்னும் பாடல் பெற்றவர்கள் பற்றிய வாழ்க்கைக் குறிப்பைக் கொடுத்திருப்பது பாராட்டுதற்குரியது. நமக்குத் தெரிந்தவர்களைப் பற்றித் தெரியாத பல செய்திகளை அவர் தரும்போது வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது. மரபுக் கவிதைகளையும் புதுக்கவிதைகளையும் பிறமொழிச் செ·றகள் கலவாது படிப்பதற்குப் பொருட் சுவையுடன் இயற்றியுள்ளது பாராட்டுதற்குரியது. பல கவியரங்கங்களில் கலந்து கொண்டவர். சிறுகதை புனையும் ஆற்றல் பெற்றவர். தமிழாசிரியராகப் பணியாற்ற வேண்டியவர் புதுவையில் அரசுப் பணியேற்று ஏனாம் பகுதியின் ஆட்சியர் பொறுப்பு வரை உயர்ந்தவர். இவர் எழுத்துப்பணி சிறப்பதாக.

□

தென்னிந்திய தமிழ்ச்சங்கம் 80, பிரகாசம் சாலை, சென்னை - 108
அப்பர் அச்சகத்தில்
திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பட்டது.

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.,

கழகப் புதிய, மற்றும் மறுபதிப்பு வெளியீடுகள்

தாயுமான சுவாமிகள் திருப்பாடற்றிரட்டு - பூவை கலியாண சுந்தர முதலியார்	340	00
சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம் - ந. சுப்பு ரெட்டியார்	140	00
இருபா இருபஃது - ஆ. பொன்னையா	110	00
காலம் உங்கள் கையில் - ச முத்துக்குமரன்	40	00
தமிழ் கற்பிக்கும் முறை - த.பு. சந்தான கிருட்டிணன்	42	00
சிவபுராணம் தெளிபொருள் - ஆ. பொன்னையா	120	00
தமிழர் பண்பாட்டில் தாமரை - அ. இராகவன்	105	00
நாள்வழி நற்சிந்தனை - ஜேம்ஸ் ஆவன்	140	00
விகடகவி - மனோவின் தெனாலிராமன் கதைகள்	40	00
திருமந்திரம் உரை - ப. இராமநாத பிள்ளை	425	00
திருப்புகழ் (முழுவதும்) 6 பகுதி		
(ரூ. 1070/- கழிவு நீங்கி	870	00
திருக்குறள் பரிமேலழகர் உரை	120	00
மேற்கோள் விளக்கக் கதைகள்	500	00
கடத்தப்பட்ட டேவிட் - இரா. முத்துக்குமாரசாமி	70	00
கருமணிமலர் - இரா. முத்துக்குமாரசாமி	80	00
அண்ணல் அடிச்சுவட்டில்	60	00
மகாமக கும்பகோணமும் நவக்கிரக வழிகாட்டியும்	40	00
பழமொழி நானூறு	150	00
சங்கத் தமிழ் கூறும் சட்ட நெறி	45	00
சிறு பஞ்சமூலம்	50	00
ஏலாதி	35	00
திரிகடுகம்	40	00
முதுமொழிக் காஞ்சி	25	00
ஆசாரக்கோவை	35	00
நான்மணிக் கடிகை	35	00
வாஸ்து (VASTHU)	68	00

Register of Newspapers for India No. 414 / 57
Postal Regn. TN / PMG (CCR) / 238 / 03-05. W PP -121 / 03-05
Licensd to Post without prepayment on 21-11-2005 NOV. 2005

கழகப் புதிய வெளியீடுகள்

உலக மேதைகளின் பொன் மொழிகள் - மே. பாலசுப்பிரமணியன்	50/-
காலம் உங்கள் கையில் - முனைவர் ச. முத்துக்குமரன்	40/-
தமிழர் சமயம் - கா. சு. பிள்ளை	60/-
தமிழர் வீரவிளையாட்டு - அ. அருணாசலம்	100/-
தஞ்சை சரசுவதிமகால் நூலகம் - முனைவர் ஆ. குணசேகரன்	150/-
குலோத்துங்கன் கவிதைகள் - பா. வீரமணி	150/-
திருக்குறள் 1330 - குமரி சு. நீலகண்டன்	130/-
தமிழ்ச் சங்கங்களின் வரலாறு - துடிசை கிழார் அ. சிதம்பரனார்	65/-
அத்வைதம் ஓர் அறிமுகம் - பாரதி சந்திரன்	30/-
பெண்ணாற்றல் விண்ணாற்றல் - மணிமேகலை	30/-
சிந்தாமணிக் கதைகள் - வித்துவான் திரு. முருக இலக்குவனார்	40/-
கழகப்புள்ளியியல் அகராதி	80/-
சைவமும் தமிழும் - ந. சுப்ப செட்டியார்	180/-
திருக்குறள் தெளிவுரை - டாக்டர் மு.வ	25/-

திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்.,
522, டி.டி.கே சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை-18
தொலைபேசி : 52112332, 5211 929

அப்பர் அச்சகம், சென்னை-108. விலை ரூ. 6-00